
## ‘கை’க்கு மட்டுமல்ல ‘பைக்கும்.. மகத்தான லாபம் கொடுக்கும் மருதாணி..!



நவ நாகரிக மங்கைகளாக இருந்தாலும் சரி, கிராமத்துப் பெண்களாக இருந்தாலும் சரி.. அவர்களில் மருதாணியை விருமாபாதப் பெண்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அந்தளவிற்கு மகளிர் மத்தியில் மருதாணிக்கு மவுசு உண்டு. அதனால் தான் இன்றும் கூட வீடுகளில் மருதாணிச் செடியை வளர்க்கும் பழக்கம் இருக்கிறது.

‘மெகந்தி போடுவதற்கு, இளநரைக்கான தைலம் என்று பல வகைகளில் பயன்படுவதால் மருதாணிக்கான தேவை இன்று அதிகரித்து வருகிறது. இதனால், மருதாணியையே தனிப் பயிராகத் தோட்டங்களில் வளர்த்து லாபம் பார்க்கக் கூடிய வாய்ப்பு இன்று பெருகி வருகிறது. அந்த வரிசையில், மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டியைச் சேர்ந்த ராஜகோபால், மருதாணி விவசாயத்தில் தீவிரமாக இறங்கியிருக்கிறார்.

மழையைப் பார்த்து மாமாங்கம் ஆன பகுதி போல் காய்ந்த புல், பூண்டுகளுடன் வெறுமையாகத்தான் காட்சியளிக்கிறது டி.கல்லுப்பட்டி.. சுட்டெரிக்கும் வெயிலில், கருப்பு மையைக் கொட்டியது போல காணப்படும் கரிசல் பூமியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக பெயருக்குத்தான் நடக்கிறது விவசாயம். ஊரை ஒட்டிய பெரும்பாலான நிலங்கள், ஏதாவது ஒரு பெயர் சூட்டப்பட்ட நகராக, பெயர்ப் பரகைகளைத் தாங்கிக் கொண்டு, வீட்டு மனைகளாக மாறிக் கிடக்கின்றன. அவற்றுக்கு மத்தியலும் மலர்ந்து சிரிக்கிறது. ராஜகோபாலின் மருதாணித் தோட்டம்!

பாசனம், அறுவடை மட்டுமே வேலை!

மகிழ்ச்சியோடு வரவேற்ற ராஜகோபால், “விவசாயம் எங்க குலத்தொழில். இடையில் நான் வாத்தியார் வேலைக்குப் போயிட்டேன். இருந்தாலும், விவசாயத்தை விடவில்லை. எங்களுக்குச் சொந்தமாக 40 ஏக்கர் மானாவாரி காடு இருக்கு. ஆரம்பத்தில் அந்த நிலங்களில் சிறுதானியங்களைத்தான் பயிர் பண்ணிக்கிட்டு இருந்தேன். வேலைக்கு ஆள் தட்டுப்பாடு வந்த பிறகு, சிறுதானியங்களை விட்டுட்டு மரக்கன்றுகளை நட்டுட்டேன்.

ஊருக்குப் பக்கத்தில் இருக்கிற இந்த மூன்று ஏக்கர், கொஞ்சம் தண்ணீர் தட்டுப்பாடு உள்ள பகுதி. அதில் இரண்டு ஏக்கரில் இயற்கைச் சாயம் தயாரிக்கிப் பயன்படுகிற அவுரியை நடவு செய்திருக்கேன். அரை ஏக்கரில் மருதாணியை சாகுபடி செய்திருக்கேன். நடவு பண்ணிய பிறகு பாசனமும், அறுவடையும் தான் மருதாணியில் நாம பார்க்க வேண்டிய பண்டுதம். இதோட வேர் அவ்வளவு சீக்கிரமாக சாகாதுங்கிறதால் வருடக் கணக்கில் காய்ந்த கிடந்தாலும்.. ஒரு மழை பெய்தால் ‘குப்’புனு தழைஞ்சிடும். அதனால் தான் இதற்கு ‘மருதோன்றி’ங்கிற பெயரே வந்தது. அதுதான் காலப்போக்கில் மருவி ‘மருதானி’னு ஆயிடுச்சு.

வறண்ட பகுதியிலும் வளரும்!

ஆரம்பத்தில் வேலிக்காகத்தான் இந்த மருதாணியை வரப்போரமா நடவு செய்தேன். நன்றாக வளர்ந்த பிறகு, மூன்று மாதத்திற்கு ஒரு தடவை, மருதாணி இலை விற்பனை மூலமாக 1,000 ரூபாய் வருமானம் கிடைத்தது. ‘வேலியா வைக்கும்போதே இவ்வளவு வருமானம் கிடைக்கிறதே, இதையே ஏன் தனிப்பயிராக செய்யக் கூடாதுனு யோசனை வந்தது. அதற்கு பிறகுதான் வேலியில் இருந்த குச்சிகளை வெட்டி, பதியன் போட்டு ஒரு ஏக்கரில் நட்டேன்.

வளர்ந்த பிறகு, 25 செடியில் மட்டும் முள் இல்லாமல் இருந்தது. முள் இருக்கிற செடியை விட, முள் இல்லாத செடியில் அறுவடை செய்வது சுலபமாக இருந்தது. அதனால் அந்த வயலை அழிச்சுட்டு, முள் இல்லாத செடிகளில் இருந்து மட்டும் குச்சிகளை வெட்டிப் பதியன் போட்டு, இந்த அரை ஏக்கரில் நடவு செய்து இரண்டு வருஷமாயிடுச்சு. வாய்ப்பு இருக்கும் போது மட்டும் தான் பாசனம் செய்வேன். 6 மாதம் கூட தொடர்ந்து பாசனம் செய்யாமல் இருந்திருக்கேன்.

கிட்டத்தட்ட மானாவாரி மாதிரியே சாகுபடி செய்வதால் மூன்று மாதத்திற்கொரு முறை அறுவடை செய்வேன். இதையே முறையாக 15 நாளைக்கு ஒரு தண்ணீர் கொடுத்தால்.. இரண்டு மாதத்திற்கு

ஒரு முறை அறுவடை செய்யலாம். எப்பவாவது தண்ணீர் பாய்ச்சுறதைத் தவிர வேறெந்த பண்டுதமும் நான் பார்ப்பதில்லை என்றவர், மருதாணி சாகுபடி செய்யும் முறைகளை பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

குச்சியை நட்டா நல்லது!

மருதாணி அனைத்து வகை நிலங்களிலும் நன்றக வளரும். தண்ணீர் தட்டுப்பாடு உள்ள இடங்களுக்கு ஏற்றப் பயிர். இதை விதை மற்றும் குச்சி மூலமமாக சாகுபடி செய்யலாம். விதை மூலமாக நாற்று தயாரித்து நடவு செய்தால், முதல் அறுவடைக்கு ஒரு வருடம் காத்திருக்க வேண்டும். குச்சி மூலமாக நாற்று தயாரித்து நடவு செய்தால், ஆறு மாதங்களில் அறுவடை செய்து விடலாம்.

மருதாணிச் செடியில் பென்சில் கனம் உள்ள குச்சிகளை, 9 அங்குலம் நீளத்திற்கு வெட்டிக் கொள்ள வேண்டும். தொழுவுரம், மண் கலந்த கலவையை நாற்றுத் தயாரிக்கும் பிளாஸ்டிக் பைகளில் நிரப்பி, அதில் குச்சிகளை நட்டு, நிழலில் வைத்துத் தண்ணீர் ஊற்ற வேண்டும். இப்படி மூன்று மாதம் வளர்ந்த பிறகு, வயலில் நடவு செய்யலாம்.

ஏக்கருக்கு 8 ஆயிரம் செடிகள்!

ஒரு ஏக்கர் நிலத்திற்கு 5 வண்டி தொழுவுரம் போட்டு, நன்றாக உழவு செய்து மண்ணைப் புழுதியாக்கிக் கொள்ள வேண்டும். இதில் இரண்டு அடி அகலத்திற்கு மேட்டுப்பாத்திகளை நீள, நீளமாக அமைத்துக் கொள்ள வேண்டும். நீளத்தை இடவசதிக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம். பாசனம் செய்வதற்காக ஒரு பாத்திக்கும் அடுத்த பாத்திக்கும் இடையில் ஒரு அடி இடைவெளி இருக்க வேண்டும். பாத்தியின் மையத்தில் செடியை நடவு செய்ய வேண்டும். செடிக்குச் செடி இரண்டு அடி இடைவெளியும், வரிசைக்கு வரிசை 3 அடி இடைவெளியும் இருக்க வேண்டும். இப்படி நடவு செய்தால், ஏக்கருக்கு 8 ஆயிரம் செடிகள் வரை தேவைப்படும். குறைந்த நிழலில் மருதாணி நன்றாக வளரும் என்பதால், வயலில் ஆங்காங்கே அகத்தி விதையையும் ஊன்ற விட வேண்டும். தண்ணீர் பாயும் வாய்மடைகளில் ஒரு அடி ஆழ, அகலத்தில் குழி எடுத்து அதில் சாணம் மற்றும் இலை, தழைக் கழிவுகளைப் போட்டு, பாசனநீர் இந்தக் குழிகளில் நிரம்பி வழிந்து செல்லுமாறு அமைக்க வேண்டும். நடவு செய்த உடனே ஒரு தண்ணீர் கொடுக்க வேண்டும். செடி உயிர் பிடித்த பிறகு, 15 நாட்களுக்கு ஒரு முறை கூட தண்ணீர் பாய்ச்சலாம். இதற்குக் களை

எடுக்கத் தேவையில்லை. பூச்சி, நோய் தாக்காது என்பதால் பூச்சிவிரட்டி எதுவும் தெளிக்கத் தேவையில்லை.

அரை ஏக்கருக்கு 40 ஆயிரம்!

நடவு செய்த 6-ம் மாதத்தில் இருந்து அறுவடையைத் தொடங்கலாம். அதிலிருந்து அறுவடையைத் தொடங்கிடலாம். அதிலிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு தடவை அறுவடை செய்யலாம். ஒரு தடவை நடவு செய்தால், இருபது வருடம் வரை மகசூல் கொடுக்கும். மருதாணியில் இலைகள் தான் விற்பனைப் பொருள் என்பதால், செடியின் நுனிப்பகுதியில் அரை அடி உயரச் செடியைக் கொத்தாகக் கையில் பிடித்து, பண்ணை அரிவாள் மூலமாகக் குச்சியுடன் சேர்த்தே அறுத்து எடுத்து, செடிக்கு அருகிலேயே நிலத்தில் போட்டுக் காயவிட வேண்டும்.

அடுத்த நாள், அவற்றை மொத்தமாக சேகரித்து, களத்தில் காய வைக்க வேண்டும். களம் இல்லாதவர்கள் வயலிலேயே சமமான இடத்தில் தார்ப்பாயை விரித்தும் காய வைக்கலாம். மூன்றாவது நாள், கம்பை வைத்து அடித்தால், குச்சியில் இருந்து இலைகள் உதிர்ந்து விடும்.

இந்த இலைகளை எடை போட்டு விற்பனை செய்யலாம். மருதாணி இலையை வாங்குவதற்காகவே வியாபாரிகள் இருக்கிறார்கள். அதனால் அறுவடை நேரத்தில் தகவல் கொடுத்தால் வயலுக்கே வந்து, ஒரு கிலோ மருதாணிணை 25 ரூபாய்க்கு வாங்கிக் கொள்வார்கள்.

ஓரு ஏக்கரில் இருந்து மூன்று மாதத்திற்கு ஒரு தடவை ஒரு டன் மகசூல் கிடைக்கும். ஒரு அறுவடைக்கு 2,400 ரூபாய் செலவாகும். முதல் வருடம் மூன்று முறையும், இரண்டாவது வருடத்தில் இருந்து வருடத்திற்கு நான்கு முறையும் மகசூல் கிடைக்கும். முதல் வருடத்தில் செலவு போ 56 ஆயிரம் ரூபாயும், இரண்டாவது வருடத்தில் இருந்து 81 ஆயிரம் ரூபாயும் லாபமாக கிடைக்கும்.

சாகுபடி பாடம் முடித்த ராஜகோபால், எனக்கு அரை ஏக்கரில் இருந்து ஒரு தடவைக்கு 500 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. செலவெல்லாம் போக வருடத்திற்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல் லாபம் கிடைக்கிறது. எனக்குத் தெரிந்து, எந்த பண்டுதமும் இல்லாமல் இவ்வளவு வருமானம் கொடுக்கக்கூடிய பயிர் வேற எதுவுமே இல்லைங்க என்றார்.

| அரை ஏக்கரில் மருதாணி சாகுபடி செய்ய செலவு, வரவு கணக்கு.. | | |
|---|---|---|
| விவரம் | செலவு | வரவு |
| உழவு | 1,200 | |
| விதைக் குச்சி : 4,000 x 0.25 பைசா | 1,000 | |
| கன்று தயாரிப்பு | 600 | |
| நடவு | 800 | |
| பாசனம் | 2,000 | |
| அறுவடை | 3,600 | |
| மகசூல் : 500 கிலோ x ரூ.25 x 3 முறை | | 37,500 |
| மொத்தம் | 9,200 | 37,500 |
| நிகர லாபம் | | 28,300 |

இரண்டாம் ஆண்டிலிருந்து 4 முறை மகசூல் கிடைப்பதால், செலவு போக, 40,800 ரூபாய் லாபமாக கிடைக்கும்.

**தொடர்புக்கு :** ராஜகோபால்,

அலைபேசி : 98421 - 75940

---

**ஆதாரம் :** www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 10.4.11